ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

08.05.2025

1. வருக வருக உலக மக்களே
வரம் பெறுக பிரணவக் குடிலிலே
முருகா முருகா என முழங்கவே
முழுமை பெற்ற ஞானிகள் ஆசி

2. ஆசிபலமும் அடைவீர்கள் என
அழைத்துமே குருவார அருளாசி
ஆசிபட அரங்கமகா ஞானியும்
அருளுவேன் விசுவாவசு தகர் திங்கள்

3. திங்களிலே சதுர் குருவார ஆசி
தொண்டர்கட்கும் உலக மக்கட்கும்
ஓங்கார ஞானம் அடையவே
ஓங்காரக் குடிலை நோக்கி வர

4. வருகவே அரங்கன் சூட்சுமம்பட
வல்லமை மிக்க சக்தியாக
தருகின்றேன் பல வரங்களை
தருமம் தனை எவர்தம் கடமையாக

5. கடமையாக ஏற்று உலகில்
கடைப்பிடித்து வருகின்றாரோ
தடையற அவர்கட்கு எல்லாம்
தக்கபடி என் அனுகூலம் கிட்டி

6. கிட்டியே எவ்வித அல்லலும்
குறைகளும் அணுகா வாழ்வர்
தட்டாது பிரணவக் குடிலில்
தருமத்தில் தாராள பொருள் உதவி

7. உதவி செய்து வருபவர்கட்கு
உறுதுணையாக அரங்கன் யான்
பதவி சுகம் பொருள் பலம்
பாதுகாப்பும் தந்து உடனிருப்பேன்

8. இருக்கவே என் தலைமைதனை
ஏற்ற மக்களெல்லாம் இனி
வருத்தம் பிணி சோடை காணா
வளமும் நல்வாழ்வும் பெற அருள்வேன்

9. அருளவே வருகின்ற குடிலின்
ஆற்றல் மிக்க இருவிழாவிலும்
முருகப்பெருமான் அனுமதிக்க
முழுமைபட சோதியில் காட்சியாக

10. ஆகவே பிரணவக் குடிலுக்குள்
அதிசயம் பல நிகழ்த்துவேன்
வகைபட கலியுக மக்கள்
வந்து கலந்திட வேண்டி

11. வேண்டியே அரங்கன் அழைப்பாக
விளம்பினேன் அருளாசி தன்னை
தொண்டர்களும் நிர்வாகிகளும்
தேற்றம் அடைவர் இவ்விழாவில் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி